


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இலண்டன் நகரில், அஸ்ட்ரா ஜெனெகா (Astra Zeneca) நிறுவனம் சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை (GITC) 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்வது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் பிரவீன் அக்கினேபள்ளி, வணிக டிஜிட்டல் மற்றும் ஐ.டி. தலைவர் (சர்வதேசம் மற்றும் ஜப்பான்) நிக் பாஸி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், இலண்டன் நகரில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல் மற்றும் பேட்டரி உற்பத்தி, BESS (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7500 கோடி ரூபாய் முதலீட்டில் 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, இந்துஜா குழுமத்தின் தலைமை நிர்வாகி தீரஜ் இந்துஜா, இந்துஜா குழுமத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலண்டன், கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இலண்டனில் இந்திய வம்சாவளி மாணவர்களுடன் கலந்துரையாடி

# திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தி கண்காட்சியைப் பார்வையிட்டேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**இலண்டன், செப்.7–**

**இலண்டன் கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவர்களுடன் கலந்துரையாடியது குறித்தும், அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தியது குறித்தும், PACT கண்காட்சியைப் பார்வையிட்டது குறித்தும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

**இலண்டன் கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுடன் நமது திராவிட மாடல் ஆட்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் ஆற்றல் ஆகியவை குறித்த எனது கருத்துகளைப் பகிர்ந்து, மனதுக்கு நெருக்கமான உரையாடலை மேற்கொண்டேன்.**

**பின்னர், அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தி, எக்காலத்துக்குமான தமிழ்ப் பண்பாட்டின் அறிவுக் கருவூலமாகத் திகழும் திருக்குறளைப் போற்றினேன்.**

**இறுதியாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75 ஆண்டுகளையொட்டி, அதன் மக்களாட்சி மரபினையும் தற்காலப் பொருத்தப்பாடினையும் குறித்து நடைபெறும் PACT கண்காட்சியைப் பார்வையிட்டேன்.**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலண்டன், கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழகத்தில் (SOAS) உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

### ரூ.15,516 கோடி முதலீடு; 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு!

# திராவிட மாடல் அரசின் செயல்பாடு இதுதான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**லண்டன், செப்.7-**

**இதுதான் திராவிடமாடலின் செயல்பாட்டு உணர்வு என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ரூ.15,516 கோடி முதலீடு ஈர்த்தது குறித்தும் 17,613 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது குறித்தும் விவரித்துள்ளார்.**

TN RISING இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி பயணத்தில் ரூ.15,516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது குறித்தும், இதன்மூலம் நமது இளைஞர்களுக்கு 17,613 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது குறித்தும்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-




**லண்டனில் இருந்து உற்சாகமான செய்தி!**


**இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், தமிழ்நாட்டின் மின்சார வாகனச் சூழலில், பேட்டரி சேமிப்பு அமைப்புகளுக்காக 7,500 கோடி ரூபாய் முதலீடு செய்யவுள்ளது. இது 1,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.**

**ஆஸ்ட்ராஜெனெகா நிறுவனத்தின் விரிவாக்கம் மற்றும் முந்தைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், TN RISING இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி பயணத்தில் ரூ.15,516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது, இது நமது இளைஞர்களுக்கு 17,613 வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.**

**இவை வெறும் எண்கள் அல்ல இவை வாய்ப்புகள், எதிர்காலம் மற்றும் கனவுகள். இதுதான் திராவிட மாடலின் செயல்பாட்டு உணர்வு.**

இவ்வாறு மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# அனைவருக்கும் ஒரே வானம் நீ !





**பெ**ரியார் என்பது
பெயரல்ல
நெருப்பின் வடிவம்!

மு.க.ஸ்டாலின் என்பது
பெயரல்ல
பெரியார் உருவம் !

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில்
படம் திறந்து
தந்தை பெரியாரை
வானம் தொட
வைத்தார் !

சிலைக்கு
காவிப்பூசும்
வஞ்சகர் முகத்தில்
கரிப்பூசி
முடித்தார் !

மனிதன்
சக மனிதனோடு
சமமாக வாழ
கருத்தை முன்
வைத்தார் !

வெண் கொடி அசையும்
வெண் தாடியது
நிலவெடி என்று
சொல்லவா !

உலக உச்சியில்
தந்தை பெரியார்
பெயர் எழுதிய
பெரியார் பேரன்
நீ அல்லவா !

கல்வெட்டுகளில்
பட்டயங்களில்
எழுதுவதைக் கடந்த
வரலாறுப் பதிவு !

அய்யா கலைஞரின்
பெரியாரை
உலகமயமாக்கலின்
கனவு !

நிறைவேற்றினர்
தமிழர்களின்
முழு நிலவு !
உன் பேச்சில்
தீயின் தூரல்
பெரியார் சமநீதியாக
வருகிறார் !

உன் பேச்சில்
மழையின் சாரல்
அறிஞர் அண்ணா
அறிவுத் தருகிறார் !

மொழி உரிமை
மறுக்கும் யுத்தத்தில்
பகைத் தலை அறுக்கும்
சத்தத்தில்
உன்னிடம் கலைஞரே
தெரிகிறார் !

அனைத்து
நட்சத்திரங்களுக்கும்
ஒரே வானம் நீ !

உலகத் தமிழர்
உரிமைகளுக்கு
ஒரே குரல் நீ !

பெரியாரின்
எழுதுகோல்
பெருமைச் செய்கிறது
உன்னை எழுதி !

மகிழ்கிறது
பெரியார் திடல் கைகள்
உன்னைத் தழுவி !

கூர்ந்து உன்னை
உள்வாங்குகிறது
பெரியார்
கண் கண்ணாடி !

நீ எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியிலும்
பெரியார் கைத்தடிதான்
உன் முன்னாடி !

பெரியாருக்கு
உன் வீட்டில் நீ
சோறு பரிமாறினாய்
பெரியாரோ
உனக்கு
அவரையே பரிமாறினார் !

தலைவா
உன் நாடி நரம்புகளில்
பெரியார்தானே
குடியேறினார் !

ஜெர்மன் இலண்டன்
மட்டுமல்ல
உலகத்தமிழருக்கு
நீயே
முகவரி அட்டை !

என்றும் நீயே
முதலமைச்சர்
வாழ்த்துகிறது
பெரியாரின்
கறுப்புச் சட்டை !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி





திருவள்ளூர் மாவட்ட முரசொலி நாளிதழ் செய்தியாளர் இரா.அண்ணாதுரை – அ.ஜீவா இல்ல திருமண வரவேற்பு விழா திருவள்ளூரில் நடை பெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் மணமக்கள் அ.விக்னேஷ், கீதா ஆகி யோரை வாழ்த்தினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ , ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ, துரை சந்திரசேகர், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் பத்திரிகையா ளர்கள் புகைப்பட கலைஞர்கள் குடும்பத்தினர்கள் நண்பர்கள் கலந்து கொண்டனர்.